முருகப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.12.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அண்ணலே கலிவெல்ல வந்த
அருட்பெருஞ் சக்திமிக வள்ளலே
மண்ணுலகில் உன் அவதார
மகிமை மக்கள் அறிய மாற்றம்
2. மாற்றம் ஞானவழி காணுமென
மொழிந்துமே அனுகூல ஆசி
ஆற்றல்பட சுபகிருது சிலை திங்கள்
அறிவிப்பேன் சூலதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 03 ம் நாள் 18.12.2022, ஞாயிற்றுகிழமை)
3. வாரமதில் பத்ரகிரியார் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமிலா ஞானவான்கள் தனை
சுத்தநெறி கொண்டு படைக்க
4. படைக்கவே ஞானம் அருளி
பாருலகில் பிரணவக் குடிலை
தடைவெல்லும் ஞான சபையாக
தரணியில் படைத்து அருள
5. அருளும் பிரணவக் குடிலின்
அருளமுது உண்டு உலகோர்
அருள்ஞான தீட்சை தன்னை
அரங்கமகானை அனுகி ஏற்று
6. ஏற்றுமே ஞானிகள் பூசையை
இடைவிடா அனுதினமும் செய்து
மாற்றம் காண அன்னதானமதை
மண்ணுலகில் செய்து வருக
7. வருகவே வையகம் தன்னில்
வளரும் தரும பலமாக
முருகப்பெருமான் அருள் கிட்டி
முழுமை ஞானம் கண்டவர்களாக
8. ஆகவே தேறி உலகமக்கள்
அரங்கன் வழி ஞானிகளாக
மகத்துவம் கண்டு தேறுவர்
மாற்றம் உலகினில் நிகழ்த்தும்
9. நிகழ்த்தும் சக்திகளாக மாறி
நிலவுலகில் அற்புதம் படைப்பர்
அகிலமே அரங்கன் வந்த
அவதார நோக்கம் அறிந்து

10. அறிந்து அளவிலா ஞானசக்தி
அழியாமை பலம் கிட்டியே
தெரியவரும் ஞான ஆட்சிக்காலம்
துவங்கியே மக்களை காக்கும்

11. காக்கும் போற்றும் தலைமையாக
கண்டுரைப்பேன் மாற்றம் கூடும்
தேக்கமின்றி அரங்கன் வழிவர
தேசமெல்லாம் சடுதி ஆற்றல்காணும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–